# ஆகஸ்ட் 20 - புனித பெர்னார்து (1093 – 1153)

இவர் பிரான்ஸ் நாட்டில் பிறந்தார். இவருடைய பக்தியுள்ள பெற்றோர் இவரைக் கல்வி கற்கும்படி பல ஊர்களுக்கு அனுப்பினார்கள். அங்கு பக்தியுடனும் கடவுளுடனும் ஒன்றித்தும் இவர் வாழ்ந்து வந்தார். உலகத்திலிருந்தால் ஆன்மாவுக்கு ஆபத்து ஏற்படலாம் என்று அஞ்சி இவர் துறவியாகத் தீர்மானித்தார். இவருக்கு பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. துறவற வாழ்வின் உயர்வைப் பற்றி இவர் எவ்வளவு வாய்ச்சாலகத்துடன் பேசினாரென்றால் இவருடைய சகோதரர்களும், பிரபுக் குல நண்பர்கள் பலரும் துறவிகள் ஆகும்படி இவரோடு சென்றனர். மொத்தம் 30 பேர் சந்நியாச வாழ்வைத் தொடங்கினார்கள். ஞான வாழ்வில் பெர்னார்து அடைந்த முன்னேற்றத்தைக் கண்ட தலைவர் புது மடம் ஒன்றை நிறுவும்படி இவரை அனுப்பினார். பெர்னார்து அந்த மடத்தின் தலைவரானார். கடவுளது மகிமைக்காக பல நூல்கள் எழுதினார். பல இடங்களுக்கு நீண்ட பயணம் செய்தார். இவரை ஆயராக்க விரும்பினர்ளூ இவர் இணங்கவில்லை. பல பாப்புமார்கள் இவரது ஆலோசனைகளைக் கேட்டனர். பாப்புவுக்குக் கீழ்ப்படிந்து, நம் ஆண்டவர் வாழ்ந்த புண்ணிய பு ூமியை மீட்கும்படி பல ஊர்களுக்குப் போய் உரை நிகழ்த்தினார். இந்த முயற்சி தோல்வியடைந்தது. பழியை சிலர் பெர்னார்து மீது போட்டார்கள். ஆனால் போருக்குச் சென்ற வீரர்களின் பாவங்களே தோல்விக்குக் காரணம் என்று பெர்னார்து சுட்டிக்காட்டினார்.

இவர் தேவதாய் மீது மிகுந்த பக்தி உள்ளவர். இவரது சபைச் சந்நியாசிகள் ஒவ்வொரு நாளும் இரவு படுக்கச் செல்லுமுன் மாதாவின் சுரூபத்தின் முன் கூடி "கிருபை தயாபத்திற்கு மாதாவாக இருக்கிற எங்கள் இராக்கினியே வாழ்க" என்னும் செபத்தை செபிக்கும்படி ஏற்பாடு செய்தார். "ஓ இரக்கம் நிறைந்தவளே! அன்பு நிறைந்தவளே! இனிமை நிறைந்த கன்னிமரியே" என்னும் அச்செபத்தின் கடைசிச் சொற்களை இவர் அடிக்கடி செபிப்பார். "பொர்னார்து இப்பூமியில் எதற்காக இருக்கிறாய்?" என்று அடிக்கடி தன்னை வினவுவார்.

சிந்தனை: "கவனமின்றி செபிக்கிறவன் தன மன்றாட்டுக்கு கடவுள் இரங்குவார் என்று எதிர்பார்க்கலாது ஏனெனில் கெட்டுப் போன தானியத்தை ஆலையில் போட்டு நல்ல மாவு கிடைக்கும் என எதிர்பார்க்கிறவனுக்கு அவன் சமம்". (புனித பெர்னார்து)

செபம்: ஓ! ஆண்டவரே, இரக்கத்தின் அன்னையே வாழ்க!

